3

சொர்க்க வாசல்

பிந்து சாப்பாட்டுக் கூடையுடன் அந்த சிறைச்சாலையின் வாசலில் நின்றான். இன்றாவது அந்தப் போலீஸ்காரர் ஏதும் கலாட்டா செய்யாமல் தன்னை உள்ளே விடுவாரோ என்ற யோசனையுடன். நேற்று இரண்டு ரூபாய் கொடுத்தால்தான் உள்ளே விடுவேன் என்று போலீஸ்காரர் மிரட்டியதில் பிந்து உள்ளேயிருந்த அவனுடைய அப்பாவுக்கு சாப்பாடு கொடுக்க முடியாமல் போய்விட்டது. இரண்டு ரூபாய்க்கு எங்கே போவது? இன்று காலை அவனிடமிருந்து பால் வாங்கும் அந்த மதராஸி ஸாஹேப்பிடம் போலீஸ்காரரைப் பற்றிச் சொன்னபோது அவர் உடனே யாருக்கோ போன் செய்தார். அதற்கு ஏதேனும் பலன் இருக்குமோ?

வாசலில் முறுக்குமீசையுடன் அந்த போலீஸ்காரர் உட்கார்ந் திருந்தார். பிந்து தயங்கியபடி அவரருகே சென்ற போது அவர் விறைப்புடன், ''சீக்கிரம் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வெளியே வா'' என்றார்.

பிந்து 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று உள்ளே போனான். பூட்டிய கதவுக்குப் பின்னால் அவனுடைய அப்பா தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

''அப்பா, சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்.''

ஹரிராம் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். அப்பாவின் முகத்தைப் பார்த்ததும் பிந்துவிற்கு குபுக்கென்று கண்களில் நீர் நிறைந்தது. இந்த ஐந்து நாட்களில் அப்பாவிற்கு எவ்வளவு வயதாகி விட்டது!

சாப்பாட்டு டப்பாவைத் திறந்தபடி பிந்து இரகசிய குரலில் சொன்னான்: ''நேற்று அந்தப் போலீஸ்காரர் உள்ளேயே விடவில்லை. நேற்று அதனால் உனக்கு சாப்பாடு கொடுக்க முடியவில்லை.''

ஹரிராம் ஒன்றுமே பேசாமல் சாப்பிட ஆரம்பித்தான்.

''பாவம், உனக்கு ரொம்பப் பசி இல்லையாப்பா?''

ஹரிராம் பதிலே பேசவில்லை. பிந்துவுக்கு என்னவெல்லாமோ பேச வேண்டும் போலிருந்தது. அப்பாவுக்காக ஆசையாக கவனமாக சமையல் செய்தானே, உப்புக்காரம் சரியாக இருக்கிறதா? தோட்டத்தில் சோளக் கொண்டைகள் திடீரென்று பதமாகிவிட்டாற் போல் நிற்கிறது. அவன் கொஞ்சத்தை விற்று, கையில் மூணு ரூபாய் சில்லறை வைத்திருக்கிறான், எதற்கும் இருக்கட்டும் என்று. ஒரு வேளை அந்த போலீஸ்காரர் கெடுபிடி செய்தால் அப்பாவுக்கு இன்றும் சாப்பாடில்லாமல் போகுமே! அந்த மதராஸி ஸாஹேப்பின் தயவினால் இன்று சாப்பாட்டில் மண் விழவில்லை. மாட்டை வழக்கம்போல் அண்ணா ஜகதீஷ் கறக்கிறான். பிந்து ஐந்து மணிக்கே எழுந்து வாடிக்கைக்காரர்கள் வீட்டுக்குக் கொண்டு போய்க் கொடுக்கிறான். ஸ்கூலுக்குத்தான் போக முடிவதில்லை-இங்கு சாப்பாடு எடுத்து வரவேண்டியிருப்பதால். ஸகூல் ஒரு வாரம் போனால் போகிறது. அப்புறம் சேர்த்துப் படித்துக் கொண்டால் ஆயிற்று. அப்பா இன்னும் இரண்டு நாட்களில் வீட்டுக்கு வரமாட்டாரா?

சாப்பாட்டை முடித்துக்கொண்ட ஹரிராம் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளாதவன் மாதிரி மோட்டு வளையத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

பிந்து கெஞ்சுகிற மாதிரி அவனைக் கேட்டான்: ''இன்னும் இரண்டு நாளில் வந்து விடமாட்டாயா அப்பா?''

'தெரியாது' என்கிற மாதிரி ஹரிராம் உதட்டைப் பிதுக்கினான்.

''உன்மேல் தப்பில்லாதபோது எதற்காக உள்ளே அடைத்து வைத்திருக்கிறார்கள்? அப்பா, ஒரு விஷயம் தெரியுமா? எல்லோரும் மெள்ளப் பேசுகிறார்கள், நீ பணத்தை அபேஸ் பண்ணியிருப்பாய் என்று. போலீஸ் என்ன முட்டாளா என்கிறார்கள்?'' பிந்து சட்டென்று பேச்சை நிறுத்தினான். ஹரிராமின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. பிந்துவுக்கும் அழுகை வந்துவிட்டது. என்ன அசட்டுத்தனம்! இதையெல்லாம் போய் அப்பாவிடம் சொல்லலாமா?

''ஏய், எவ்வளவு நேரம் இங்கேயே உட்கார்ந்திருப்பாய்? இன்னுமா சாப்பாடு முடியவில்லை?'' என்ற போலீஸ்காரரின் அதட்டலைக் கேட்டு பிந்து மிரண்டு எழுந்தான். டப்பாவை அடுக்கி எடுத்துக்கொண்டு அப்பாவை ஒருமுறை பார்த்தான்.

''போய் வரட்டுமா அப்பா?''

ஹரிராம் தலையாட்டினான்.

பிந்துவுக்கு மறுபடியும் கண்ணில் நீர் நிரம்பிற்று. அவன் சட்டென்று கூடையைத் தூக்கிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

இன்னும் எத்தனை நாட்கள் இப்படி சாப்பாட்டுக் கூடையுடன் சிறைச்சாலைக்கும் வீட்டுக்கும் அலைவது? இன்னும் எத்தனை நாட்கள் ஸ்கூலுக்குப் போகாமல் இருப்பது?

''அரே பிந்து?''

பிந்து திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் ஸ்கூலில் படிக்கும் இரண்டு பெரிய பையன்கள் வெற்றிலை பாக்குக் கடையில் பீடி புகைத்துக் கொண்டிருந்தார்கள். சரியான ரௌடிகள்.

''ஸ்கூலுக்கு மட்டமா பிந்து?''

''அடேய், சும்மா இரு. 'தானா'வுக்கு சாப்பாடு எடுத்துப் போகவே அவனுக்கு நேரம் போதவில்லை. ஸ்கூலைப் பற்றிக் கேட்கிறாயே?''

''அப்பன் திருடனாயிருந்தால் என்ன கஷ்டம் பார்த்தியா?''

பொங்கிவந்த கண்ணீரைத் துடைத்தபடி பிந்து வேகமாக நடையைக் கட்டினான்.

இவர்களுடன் பேசிப் பயனில்லை-கையில் பலமில்லாதபோது. பகவானே, அப்பாவைச் சீக்கிரமாக வீட்டுக்கு அனுப்பமாட்டாயா? அப்பாமேல் தப்பே இல்லை என்று எல்லோருக்கும் காண்பிக்க மாட்டாயா?

பிந்து கிடுகிடுவென்று நடையைக் கட்டினான். திடீரென்று வானம் இருண்டு வந்தது. மழை வருவதற்குள் வீடு போய்ச் சேர வேண்டும். அண்ணா பால் கறக்கப் போகையில் புல்கட்டைத் தூக்கிக் கொண்டு போகவேண்டும்.

சிறு சிறு தூறல் விழ ஆரம்பித்து விட்டது. பிந்து வேகமாக நடையைக் கட்டினான். இருக்கும் ஒரே குடை அண்ணனுக்கு வேண்டும் என்று வைத்துவிட்டு வந்துவிட்டான். எதிர்த்தாற்போல் தொலைவில் கரிய ராட்சசன் மாதிரி மேகக்கூட்டங்கள் படையெடுத்து அவனை நோக்கி வர ஆரம்பித்தன. அவனுக்குச் சட்டென்று தம்பி தினேஷின் நினைவு வந்தது. தினேஷுக்கு மூளை வளர்ச்சியில்லை. ஐந்து வயதாகியும் இப்பொழுதுதான் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுகிறான், கிளிப்பிள்ளை மாதிரி. மழையில் நின்று ஆடிப் பாடிக் கொண்டிருப்பான் இந்த ஷில்லாங் குளிரையும் பொருட்படுத்தாமல். பிறகு இரவே வந்துவிடும் காய்ச்சல். அம்மா மட்டும் இப்போது இருந் தால்...! பிந்துவுக்குத் திடீரென்று ஏக்கம் மனசைக் கவ்விற்று. அம்மா

எவ்வளவு நல்லவள்! எவ்வளவு நல்ல நல்ல கதைகள் சொல்வாள்! எவ்வளவு ருசியாகச் சமைப்பாள்! அவள் அடிக்கடி சொல்வாள்: இந்த பூமியில் நல்லதே செய்து நல்லதே நினைத்தால் அவர்கள் இறக்கும் போது சொர்க்கவாசலைத் திறந்து வைத்திருப் பாராம் பகவான். அந்த வாசலுக்குப் போய்விட்டால் பிறகு துன்பம் என்பதே இல்லையாம். ஆனால் பகவான் அவளுக்கு ரொம்பவும் அவசரப்பட்டு வாசலைக் காண்பித்துவிட்டார். போன வருஷம் பொசுக்கென்று ஒரு நாள் போய்விட்டாள் நோய் நொடி ஏதும் இல்லாமல். அவள் போகும் போது தினேஷுக்கு நான்கு வயது. பிந்துவுக்கு ஏழு.

சடசடவென்று மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. பிந்து சட்டென்று ஒரு கடையில் ஒதுங்கிக் கொண்டான். மின்னலும் இடியுமாக வானம் அப்போதைக்கு மூடாது போலிருந்தது. கம்பளிக் கோட்டை பிந்து இழுத்து மூடிக் கொண்டான். இருந்தும் காலெல்லாம் வெடவெடவென்று நடுங்கிற்று குளிரில். அவன் சின்ன மண்டைக்குள் என்னென்னவோ குழப்பங்கள், பிரச்னைகள், பயங்கள். அப்பா மட்டும் சீக்கிரம் வீடு வந்துவிட்டால் பிறகு எந்தக் கவலையும் இல்லை. எப்போதும்போல் உலகம் அமைதியாக இருக்கும். வழக்கம் போல் அவன் அதிகாலையில் அந்த மதராஸி ஸாஹேப்பின் வீட்டிற் குப் பால் கொடுத்துவிட்டு மற்ற வாடிக்கைக்காரர்களையும் கவனித்து விட்டு வந்தால், பிறகு இரண்டு ரொட்டி சுட்டுத் தின்று ஸ்கூல் கிளம்ப சரியாக இருக்கும். அந்த மதராஸி மேம் ஸாஹேப்பை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்த மேம்ஸாஹேப் அந்தக் குளிரில் அதிகாலையில் கோழி கூவுவதற்கு முன் ஏன் எழுந்திருக் கிறாள் என்று புரியவில்லை. எழுந்ததும் காப்பி வேண்டுமாம். பால் கறக்கக் கொஞ்ச நேரமானாலும், ''க்யுன்டா இத்தனா லேட்?'' என்பாள். 'டா''டா' என்று இந்தியோடு அர்த்தமில்லாமல் சேர்த்துச் சேர்த் துப் பேசினாலும் அந்த மேம் ஸாஹேப் மிகவும் நல்லவள். 'தால்' 'சப்ஜி' எது மிகுந்தாலும் அவனுக்குத் தான் கொடுப்பாள். அவன் முகம் வாடி னால் பொறுக்காது. திடீரென்று பிந்து நினைத்துக் கொண்டான். அந்த

மேம் ஸாஹேப்புக்கு சொர்க்கவாசலைத் திறந்து வைப்பார் ஆண்டவன்.

மழை நன்றாக நின்றுவிட்டது. கடையில் ஒதுங்கியிருந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியேறி விட்டதை பிந்து அப்பொழுதான் கவனித்தான். நாலரை மணிதான் இருக்கும். இருந்தும் நன்றாக இருட்ட ஆரம்பித்துவிட்டது. நேரமாகிவிட்டது என்ற பரபரப்போடு பிந்து நடந்தான். அண்ணா நன்றாகக் கோபித்துக் கொள்ளப் போகிறான். எங்கேயடா ஊர் சுற்றிவிட்டு வந்தாய் என்று மாட்டைக் குத்தும் குச்சியால் அடிப்பான். அடியை வாயை மூடிக்கொண்டு பொறுத்துக் கொள்ள வேண்டும். அழுதால் ஜகதீஷ் இன்னும் அடிப்பான். பிந்துவுக்கு அம்மாவின் நினைவு வந்தது. அம்மா அவ்வளவு நல்லவளாக இருந்தும் ஹரிராமுக்கு அடிக்கடி அவள்மேல் கோபம் வந்துவிடும். அவளை அவன் மூர்க்கத்தனமாக அடிப்பதை யும், அவள் வாயை மூடிக் கொண்டு அதைத் தாங்கிக்கொள்வதையும் பிந்து பார்த்திருக்கிறான்-பயத்தில் அகல விரியும் கண்களுடன். பிந்து எவ்வளவோ முறை அவளைக் காரணம் கேட்டிருக்கிறான். அவள் சொல்லமாட்டாள். ஹரிராமைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள். சில சமயங்களில் பிந்துவைக் கட்டிக்கொண்டு 'ஓ'வென்று அழுவாள். பிறகு அவன் முதுகை வருடியபடியே ''நீ நல்லவனா யிருக்கணும் மகனே என்பாள். நல்லதையே நினைக்கணும், நல்லதையே செய்யணும். கெட்ட எண்ணம் மனசைக்கூடத் தொடக் கூடாது. ஏன்னா பகவான் முட்டாளில்லை மகனே. கணக்கு வைத்துக் கொண்டிருப்பார் எல்லாத்துக்கும்'' என்பாள்.

பிந்துவுக்குப் பதிலே பேசத் தெரியாது. அம்மா அப்படி முது கைத் தடவும்போது ஒருவித சுகம் ஏற்படும். அவள் சொல்வதெல் லாம் சத்தியம்போல் தோன்றும். நல்லதையே நினை, நல்லதையே செய் என்ற மந்திரம் காதுகளில் ரீங்காரம் போல் ஒலிக்கும். அம்மா ரொம்ப நல்லவள் என்கிற எண்ணம் மனசில் ரம்யமாய் நிற்கும். பிந்துவின் கண்களில் நீர் நிறைந்தது. அம்மா

திடீரென்று செத்துப் போய்விட்டாள். சொர்க்கத்துக்குப் போக அவ்வளவு அவசரமா? அவள் சொன்னதெல்லாம் இன்னும் காதுகளில் ஒலிக்கிறது. அவள் இப்பொழுது இருந்தால் அப்பா இப்படி ஜெயிலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் துடித்துப் போயிருப்பாள். அந்த தசரத்தினால் எவ்வளவு பெரிய கஷ்டம் வந்துவிட்டது?

அதோ, வீடு நெருங்கி விட்டது. இருட்டைப் பார்த்தால் ஐந்தரை மணி ஆகியிருக்கும்போல் இருக்கிறது. பிந்து பரபரவென்று நடந்தான். ஜகதீஷே எல்லோருக்கும் பால் கொடுத்திருக்க வேண்டும். இன்று நல்ல உதை கிடைக்கப் போகிறது.

''டேய் பிந்து!''

மதராஸி மேம்ஸாஹேப்.

''க்யூன்டா தூத் நை லாயா?''

பிந்து திகைத்தான்.

''அபிதக் நை மிலா?'' (இன்னும் கிடைக்கவில்லை?)

''நைடா.''

''அச்சா, இப்ப நான் கொண்டு வருகிறேன்.''

பிந்து அவசரமாக மாட்டுக் கொட்டிலுக்கு ஓடினான். அங்கு அண்ணனில்லை. பால் கறந்த சுவடே தெரியவில்லை. மாடு நிலைகொள்ளாமல் நின்றிருந்தது. பிந்துவுக்குத் திகைப்பாக இருந்தது. ஜகதீஷ் எங்கே போய்விட்டான்? பிந்து குழம்பியபடி வீட்டுக்கு நடந்தான். ஒரு வேளை உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கிறானோ அண்ணன்?

வாயிற்படியில் தினேஷ் உட்கார்ந்திருந்தான், எதையோ வெறித்துப் பார்த்தபடி. அவனைத் தாண்டிக்கொண்டு பிந்து உள்ளே

நுழைந்தான். ஜகதீஷைக் காணோம். பிந்துவிற்கு ஒன்றும் புரிய வில்லை.

''தினேஷ், அண்ணன் எங்கே?''

தினேஷுக்குக் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. பிந்து மறுபடியும் சப்தமிட்டுக் கேட்டான்.

''ஜகதீஷ் பஜாருக்குப் போய் இருக்கான்'' என்றான் தினேஷ் நிதானமாக.

பிந்துவுக்கு குழப்பமாக இருந்தது. இந்தப் பைத்தியம் சொல்லுவதை நம்புவதா?

வெளியில் மறுபடியும் மழை பெரிதாகப் பிடித்துக் கொண்டது. பிந்து தினேஷை உள்ளே உட்கார்த்தி வாயிற் கதவைச் சாத்தினான். தினேஷ் திரும்பத் திரும்ப, ஜகதீஷ் பஜாருக்குப் போயிருப்பதாகச் சொன்னான். பிந்துவுக்கு அது உண்மையாக இருக்குமோ என்று தோன்றினாலும், பால்கூடக் கறக்காமல் பஜாரில் அண்ணனுக்கு என்ன வேலை இருக்க முடியும் என்று புரியவில்லை.

மழை நின்று எவ்வளவோ நேரமாகிவிட்டது. பிந்துவுக்குப் பீதியும் கலவரமும் ஏற்பட்டது. அண்ணனையும் போலீஸ் பிடித்துக் கொண்டு போயிருக்குமோ? அந்த நினைப்பே அவனுக்குப் பயங் கரமாக இருந்தது. போன வாரம் இதே நேரம். ஹரிராமும் குழந்தை களும் சாப்பிட்டுப் படுக்கப்போகும் நேரம். திமுதிமுவென்று யாரோ வாயிற்கதவைத் தட்டினார்கள். வாயிற் கதவைத் திறந்ததும் இரண்டு போலீஸ்காரர்களுடன் அந்தச்சண்டாளன் தசரத் நின்றிருந்தான்.

ஹரிராமைச் சுட்டிக்காட்டி ''அதோ, அவன்தான். அவனிடம் பத்தாயிரம் கொடுத்திருக்கிறேன்'' என்றான் தசரத்.

என்ன ஏது என்று புரிவதற்கு முன்பு ''எடு பணத்தை வெளியே'' என்றார்கள் போலீஸ்காரர்கள்.

''எந்தப் பணம்?'' என்று ஹரிராம் கேட்டானோ இல்லையோ, ''என்ன, தமாஷ் பண்ணுகிறாயா?'' என்று மாற்றி மாற்றி அவன் முதுகிலும் விலாவிலும் எத்தனை அடிகள்! பயத்தில் நாக்கு உலர பிந்து, தினேஷைப் பிடித்தபடி நின்றான். செம்மையாக அடித்துவிட்டு ''நட ஸ்டேஷனுக்கு'' என்று அன்று ஹரிராமை அழைத்துப் போனதிலிருந்து பிந்து தினமும் நடையாய் நடக்கிறான் சாப்பாட்டுக் கூடையுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு.. இரண்டு நாட்களுக்கு தினேஷ் பேசவேயில்லை. அண்ணா ஜகதீஷ் சற்று நேரம் பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருந்தவன் பிறகு எதுவுமே நடக்காத மாதிரி கம்பளிக்குள் முடங்கிக் கொண்டு படுத்து விட்டான். அவனை எதுவும் கேட்பதற்குப் பயந்து பிந்துவும் கம்பளிக்குள் முடங்கிக்கொண்டான் மௌனமாகக் கண்ணீர் விட்டபடி. விடிந்த பிறகுதான் தசரத் செய்திருக்கும் கேடித்தனம் புரிந்தது. இந்த ஷில்லாங்கில் ரகசியமாக நடக்கும் அம்பு எய்யும் சூதாட்டத்தைப் பற்றி அவன் கேள்விப் பட்டிருக்கிறான். தசரத்துக்கு அதில் 60,000 ரூபாய் கிடைத்ததாம். போலீசுக்கு விஷயம் தெரிந்து விட்டது என்று தெரிந்த உடனே அதை எங்கோ ஒளித்து வைத்து விட்டு இவனுக்குக் கொடுத்தேன் அவனுக்குக் கொடுத்தேன் என்று போலீசுக்குக் கதை விட்டதன் பலன்தான் ஹரிராம் இப்பொழுது ஜெயிலில் இருக்கிறான். எப்பொழுது விசாரணை நடக்குமோ, எப்பொழுது தீர்ப்பு வருமோ? நல்லவனைப் போல் வேஷம் போட்டுக் கொண்டிருந்த தசரத், அப்பாவின் மேல் ஏன் இப்படி ஒரு பழியைப் போட்டான்? பிந்துவுக்குப் புரியவில்லை.

தொழுவத்திலிருந்து மாடு ''மா'' என்று கத்தும் ஓசை கேட்டு பிந்து திடுக்கிட்டு எழுந்தான். அவனுக்கு மறுபடியும் திடீரென்று மனத்தில் பீதி படர்ந்தது. ஜகதீஷ் இன்னும் வரவில்லையே? மாடும் புதிசு. அண்ணனுக்கு மட்டும்தான் அடங்கும். அவன் செய்வது அறியாது ஜகதீஷைத் தேடுவது மாட்டைக் கறப்பதைவிடச் சுலபம் என்று நினைத்தவன் போல் நடக்க் ஆரம்பித்தான்.

''ஏ பிந்து!''

பிந்து திரும்பினான்.

''தூத் கஹான்டா?''

அடைத்துக் கொண்டிருந்த துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது பிந்துவிற்கு. 'ஓ'வென்று அழ ஆரம்பித்தான். மேம்ஸாஹேப் பதறிப் போனாள். அவன் அழுதுகொண்டே விஷயத்தைச் சொன்னான்.

''நான் தனியே என்ன செய்வேன் மேம்ஸாஹேப்? மாட்டைப் பார்ப்பேனா, வீட்டைப் பார்ப்பேனா?''

மேம்ஸாஹேப் அவனைத் தேற்றினாள்: ''அழாதேடா பிந்து. எங்கள் ப்யூன் வருவான். அவனைப் பார்க்கச் சொல்கிறேன் மாட்டை. ஜகதீஷ் எங்கே போய்விடுவான், வந்து விடுவான்'' என்றவள், அவனைக் கட்டாயப்படுத்தி இரண்டு ரொட்டி சாப்பிடச் செய்தாள். அவன் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டே ''சொந்த அண்ணனா யிருந்தா இப்படிச் செய்வானா?'' என்றாள்.

பிந்து பேசாமலிருந்தான். அவனுக்குத் தெரியும் ஜகதீஷ் அவனுடைய அம்மா வயிற்றில் பிறந்தவன் இல்லையென்று. ஆனால் அவன் அதைப்பற்றி எண்ணியதே இல்லை. அவனுடைய அம்மாவும் அவனை வித்தியாசமாக நடத்தியதே இல்லை.

அவன் சட்டென்று எழுந்தான். ''நான் தானாவுக்குப் போய் அப்பாவைப் பார்த்துவிட்டு வருகிறேன், மேம்ஸாஹேப்'' என்றபடி நடந்தான்.

தானாவின் வாசலில் ஏகக் கும்பல். பிந்து கூட்டத்தைப் பார்த்துக் கலவரம் அடைந்து போனான். சாப்பாட்டு நேரத்தில்தான் உள்ளே செல்ல அனுமதி கிடைக்கும் என்று ஒரு போலீஸ்காரர் சொன்னார். பிந்து சோர்வுடனும் குழப்பத்துடனும் ஓர் ஓரத்தில் போய் உட்கார்ந்தான். சாப்பாட்டு வேளைக்கு இன்னும் இரண்டு மணிநேரம் இருந்தது.

எல்லோரும் குசுகுசு என்று பேசுவது அவனுக்குச் சுமாராக விளங்கிற்று. நேற்று இரவு இன்னும் பல பேர் இந்த சூதாட்டக் கேஸில் பிடிபட்டுப் போனார்களாம். இந்த வழக்கினால் வேறு பல பயங்கர வழக்குகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றனவாம். பிந்துவுக்கு இதைக்கேட்டு ஒரு வகையில் சமாதானம் ஏற்பட்டது. எல்லோரும் பிடிபட்டுப் போனார்கள் என்றால் ஹரிராமைக் குற்றமற்றவன் என்று விட்டுவிடுவார்கள் அல்லவா?

''நம்ம ஹரிராமின் கதையைக் கேட்டாயா?''-பிந்து திடுக்கிட்டுத் திரும்பினான்.

சற்று தொலைவில் அவன் தந்தைக்குப் பரிச்சயமான இரண்டு பால்காரர்கள் வந்து உட்கார்ந்திருந்தார்கள். பிந்து தன்னை மறைத்துக் கொண்டு நின்றான்.

''ஆமாம், அப்படி ஒரு சண்டாளன் அவன் என்று என்னால் நம்ப முடியவில்லை.''

''ஒரு வருஷம் யாருக்கும் தெரியாமல் எப்படித்தான் வைத்திருந்தானோ?''

''ஹரிராமின் மனைவி மகா உத்தமி. ஆனால் இந்தச் சண்டாளனுக்கு எப்பவுமே அவள் மேல் சந்தேகம். இப்படி மூத்தாள் பிள்ளையுடன் சேர்ந்து கொலையே செய்துவிடுவான் என்று யார் நினைத்தார்கள்? என்னவோ அவளுக்கு இருதயக் கோளாறு என்றான். நாமும் நம்பினோமே!''

பிந்துவுக்கு அதிர்ச்சியில் மயக்கம் வந்துவிடும் போல் இருந்தது. இவர்கள் பேசுவதில் ஏதேனும் அர்த்தம் இருக்குமா? அவனுடைய அம்மாவையா? அவ்வளவு நல்ல அம்மாவையா? அதான் அப்படி திடீரென்று செத்துப் போனாளா? சீச்சீ! இந்தப் பைத்தியக்காரர்கள் ஏதோ உளறினால் தானும் கண்ணை மூடிக்

கொண்டு அப்பாமேல் பழியைப் போடுவதா? அவர்கள் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''இந்த விஷயம் தசரத்துக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. இந்த சூதாட்டவழக்கில் தான் மாட்டிக்கொண்டதும் ஹரிராமை மிரட்டிப் பத்தாயிரம் பிடுங்காலம் என்று பார்த்திருக்கிறான். ஹரிராம் எங்கே போவான் பத்தாயிரத்துக்கு? பணம் கிடைக்காது என்று தெரிந்ததும், இந்த விஷயத்தை அவிழ்த்துவிட்டான். இப்பொழுது ஜகதீஷையும் பிடித்துப் போட்டு விட்டார்கள்.''

பிந்து வேகமாக தலையை ஆட்டிக் கொண்டான்: ''இருக்காது, இருக்கவே முடியாது. இப்படியும் ஒரு பழியை யாராவது போடு வார்களா? அந்த தசரத்துக்கு மூளை கலங்கிப் போயிருக்க வேண்டும். எவ்வளவு நல்ல அம்மா! அவளையா? நல்லதையே நினைக்கணும் என்றவள் அப்படியா செத்துப் போனாள்?'' பிந்துவுக்கு நெஞ்சே விண்டு விடும் போல் இருந்தது.

சாப்பாட்டு மணி அடித்த சத்தம் கேட்டு அவன் சட்டென்று எழுந்தான். அப்பாவைக் கேட்க வேண்டும். இது நிஜமில்லை என்று அவர் வாயால் தெரிந்து கொள்ள வேண்டும். இது நிஜமில்லை.. இது நிஜமில்லை..

அவன் மெள்ள மெள்ள உள்ளே சென்றான். அடைக்கப்பட்ட கதவிற்குப் பின்னால் ஹரிராம் முழுங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பிந்துவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

''அப்பா!''

ஹரிராம் நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடி முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

பிந்து அவனைத் தீவிரமாகப் பார்த்தான்.

''அப்பா, இவர்கள் பேசிக் கொள்வது நிஜமா?''

ஹரிராம் தலை நிமிரவில்லை.

''அப்பா, சொல்லுங்கள்!''

அவன் குரலில் இருந்த வேகத்தைத் கண்டு திடுக்கிட்டவன் போல் ஹரிராம் தலை நிமிர்ந்தான்.

''என்ன பேசிக் கொள்கிறார்கள்?''

பிந்துவுக்கு வாயில் வார்த்தைகள் வரவில்லை. கண்ணில் நீர்கட்டித் தொண்டை அடைத்தது.

''நீங்கள், நீங்கள் அம்மாவை..'' என்றவன் விசித்து விசித்து அழுதான். ''அது நிஜமில்லை என்று சொல்லுங்கள்.. பொய் என்று சொல்லுங்கள்.''

ஹரிராம் உணர்ச்சியில்லாமல் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பிந்துவின் பிஞ்சுத் தோள்கள் பொங்கிப் பொங்கி எழுந்து ஓய்ந்தன.

''சொல்லுங்கள் அப்பா, நிஜமா?''

ஹரிராம் ஒரு நிமிஷம் தயங்கினான். பிந்து ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தான்.

''இல்லை என்று இனிமேல் சொல்ல முடியாது மகனே!'' என்று ஹரிராம் முணுமுணுத்தான்.

பிந்துவுக்கு விழி தெறித்துவிடும்போல் இருந்தது. இரும்புக் கிராதியைப் பிடித்தபடி ''இல்லை! இல்லை! இது பொய்!'' என்று கத்தினான். வெறித்துப் பார்த்தவனது கண்களிலிருந்து சரம்சரமாய் நீர் வழிந்தது. சற்று நேரம் கழித்து பிந்து மெள்ளக் கேட்டான்:

''எதற்கப்பா? அம்மா என்ன தப்பு செய்தாள்?''-ஹரிராம் தோளைக் குலுக்கினான்.

''உன் அம்மா நல்லவள் இல்லை மகனே.. அந்த தசரத்துடன்..''-அவன் பல்லைக் கடித்தான்.

பிந்து சீறிக்கொண்டு எழுந்தான்.

''தூ!'' என்று காறி உமிழ்ந்தான். ''என் அம்மாவை நல்லவள் இல்லை என்கிறாயா, கொலை செய்துவிட்டு? நீ எனக்கு அப்பாவா! தூ!''

பிந்து நகர்ந்தான் விருட்டென்று. போவதற்கு முன் திரும்பினான்: ''உனக்கு மரண தண்டனை கிடைத்தால் நான் சந்தோஷப் படுவேன்!''

அவனது கால்கள் தாமாக வீட்டிற்கு நடந்தன. அவனுக்கு அம்மாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. 'பகவானை ஏமாத்த முடியாது மகனே. எல்லாவற்றிற்கும் அவர் கணக்கு வைத்துக் கொண்டிருப்பார்.' இப்படியிருந்த அம்மாவா அவ்வளவு பரிதாபமாகச் செத்துப் போனாள்?

வீட்டின் நிலைப்படியில் தினேஷ் கால்களை ஆட்டியபடி உட்கார்ந்திருந்தான்.

''ஜகதீஷ், பஜார் போயிருக்கான்'' என்றான் அவனைப் பார்த்து. அவனைக் கட்டிக் கொண்டு 'ஓ'வென்று அழுதான் பிந்து.

அவனை அணைத்தபடியே சொன்னான்: ''நாம் இரண்டு பேரும் நல்லதையே செய்வோம். பகவான் அம்மாவை ஏமாற்றின மாதிரி நம்மையும் ஏமாற்றுவாரா?''

''தெரியாது'' என்றான் தினேஷ்.

''சொர்க்க வாசல் திறந்திருக்குமா?''

''இதோ திறந்திருக்கே'' என்றான் தினேஷ், வீட்டைக் காண்பித்து.

ஆனந்த விகடன்1977

✿